# 2.2. புள்ளிவிபரப் பகுப்பாய்வு

### 2.2.1. புள்ளிவிபரப் பகுப்பாய்வு


2020 ஆம் ஆண்டில் இவ்வலுவலகம் புலனாய்வுக்கும் அறிக்கைக்குமாகப் பாராளுமன்ற பொது மனுக்கள் குழுவினால் அனுப்பப்பெற்ற 05 முறைப்பாடுகளையும் மேலதிகமாக பொது மக்களிடமிருந்து நேரடியாக 1228 முறைப்பாடுகளையும் பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மீதமாகவுள்ள 961 முறைப்பாடுகள் முடிவுபெறுவதற்குள்ளன. எனவே இவ்வருட மீளாய்வின் கீழ் கையாள வேண்டிய மொத்த முறைபாடுகள் 2194 ஆகும்.

| | நிலுவை | முடிவுறுத்தப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|
| **2019 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மீதி** | | | 961 |
| **(1)** 2020.01.01 இலிருந்து 2020.12.31 ஆம் திகதி வரை பெறப்பட்ட முறைப்பாடுகளின் மொத்தம் | | | |
| I. நேரடியாக முறைப்பாட்டாளரிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் | 1228 | | |
| II. பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் குழுவினால் அனுப்பப்பட்டவை | 5 | | |
| **(2)** 2020 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த தொகை | | | 1233 |
| **2020 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யவேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | | 2194 |

| | | | |
|---|---|---|---|
| **2020 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை**<br>1. ஆரம்ப நிலையில் முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | | | |
| I ஓம்புட்சுமானின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவை | | 521 | |
| Ii விசேட நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத முறைப்பாடுகள் | | 25 | (546) |
| 2. ஏறபுடைய நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | | |
| i. முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு அறிக்கைகள் கோரப்பட்ட முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை | 462 | | |
| ii. பெறப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயத்தை கருத்தில் கொண்டு மேலும் அறிக்கை கோரப்பட்டு முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை. | 340 | | |
| iii. அறிக்கைகள் பெறப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | | 188 | |
| iv. கோரப்பட்ட அறிக்கைகளை கருத்தில் கொண்டு எமது பரிந்துரைகளின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்பட்ட முறைப்பாடுகள் | | | |
| v. அறிக்கைகள் கோரப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | | 437 | |
| vi. முறைப்பாட்டாளர்களின் அக்கறையின்மை காரணமாக முடிவுறுத்தப்பட்ட கோவைகள் | | 178 | (803) |
| **3. அறிக்கை கோரப்பட்டு தீர்மானமொன்றை எட்டமுடியாததால் இரு குழுக்களையும் அழைத்து விசாரணை நடத்தப்பட்ட முறைப்பாடுகள்** | | | |
| i. பெற்றுக்கொண்ட அறிக்கைகளை ஆய்வு செய்து முறைப்பாட்டாளர்களையும் பிரதிவாதிகளையும் அழைத்து விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகள்- முடிவுறுத்தப்படவில்லை | 23 | | |
| ii. விசாரணையின் பின்னர் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டவை | | 11 | |
| iii. விசாரணையின் இறுதியில் பரிந்துரைகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகள்- முடிவுறுத்தப்படவில்லை. | 3 | | |
| iv. பரிந்துரைகள் வழங்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 4 | |
| v. பரிந்துரைகள் வழங்கப்பட்டு அப்பரிந்துரைகளை நிறைவுறுத்தாது காணப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 2 | (17) |
| (3)+(2)+(1) | | | (1366) |
| **2020.12.31 ஆம் திகதியில் மிகுதியாக புலனாய்வு செய்யப்படவேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | | | **828** |

### 2.2.3 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம்

2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 2194 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. அதில் 828 முறைப்பாடுகள் அடுத்த ஆண்டுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதற்கு அமைய 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1366 ஆகும். (புள்ளிவிபர பகுப்பாய்வு அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.)முறைப்பாடுகள் சார்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் தொடர்பிலான சுருக்கம் பின்வருமாறு. படவரைபு-1 2020 ஆம் ஆண்டுக்கான முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம்.





| முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| அதிகார எல்லைக்குள் உட்படாத முறைப்பாடுகள் | 546 |
| அறிக்கைகள் கோரப்பட்டு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | 188 |
| விசாரணையின் பின்னர் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள் | 4 |
| அறிக்கைகள் கோரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 626 |
| பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 2 |
| அடுத்த ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்காக கொண்டு செல்லப்படுகின்ற முறைப்பாடுகள் | 828 |
| **2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்காக முன்கொண்டுசெல்லப்படும் முறைப்பாடுகள்** | **2194** |
| | |

2.2.3 மாதாந்த பகுப்பாய்வு

2020 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1233 ஆகும். கோவிட்-19 வைரஸ் காரணமாக ஏப்பிரல் மாதம் இவ்வலுவலகம் மூடப்பட்டிருந்ததால், எவ்வகையான முறைப்பாடுகளும் அம்மாதத்தில் பெறப்படவில்லைலை. அத்துடன் மிகவும் அதிகளவிலான எண்ணிக்கையிலான 174 முறைப்பாடுகள் யூலை மாதத்தில் பதிவாகியுள்ளது. ஏற்புடைய விபரங்கள் கீழே படவரைபு 2 இல் விபரிக்கப்படுகிறது.

படவரைபு -2 2019 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள்

மாதாந்த பகுப்பாய்வு




## 2.2.4 ஆண்பால் பெண்பால் வகைப்பாடுத்தலின் கீழான பகுப்பாய்வு

**ஆண்களால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் 853 ஆகும். அதேவேளை பெண்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் 380 ஆகும்.**


அட்டவணை -2 , வரைவு-3 இல் ஆண்பால் பெண்பால் அடிப்படையில் 2020ஆம் ஆண்டுக்கான மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை

| மாதம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஜனவரி | 122 | 52 | 174 |
| பெப்ரவரி | 91 | 46 | 137 |
| மார்ச் | 56 | 31 | 87 |
| ஏப்பிரல் | 0 | 0 | 0 |
| மே | 10 | 8 | 18 |
| யூன் | 96 | 50 | 146 |
| யூலை | 88 | 32 | 120 |
| ஓகஸ்ட் | 67 | 33 | 100 |
| செப்டெம்பர் | 107 | 30 | 137 |
| ஒக்டோபர் | 82 | 41 | 123 |
| நவம்பர் | 66 | 25 | 91 |
| டிசெம்பர் | 68 | 32 | 100 |
| **மொத்தம்** | **853** | **380** | **1233** |



### 2.2.5 மாவட்ட அடிப்படையில் பகுப்பாய்வு

2020 ஆம் ஆண்டில் மிக அதிகளவிலான எண்ணிக்கையில் முறைப்பாடுகள் பெறப்பட்ட மாவட்டம் கொழும்பு ஆகும். முறைப்பாட்டின் எண்ணிக்கை 149 ஆகும். அடுத்து அதிகளவில் முறைப்பாடுகள் பெறப்பட்டது காலி மாவட்டம். அதன் எண்ணிக்;கை 136 ஆகும். கண்டி மாவட்டத்தில் 100 முறைப்பாடுகள் பதிவாகியிருந்தது. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து எந்த முறைப்பாடுகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. படவரைபு -4 இல் விபரிக்கப்படுகிறது.



### 2.2.6 விடய பகுப்பாய்வு

2020 ஆம் ஆண்டில் காணி அனுமதிப்பத்திரம், அரச காணிகளை வழங்குதல்,ஓய்வூதிய பிரச்சனைகள், விதவைககள் அநாதைகள் ஓய்வூதியம், அலுவலக பணியாளர்களை சேவையில் நிரந்தரப்படுத்தல், தொழில் முடிவுறுத்தல், மீள பதவியில் அமர்த்தல், பதவியுயர்வு, சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவை பெற்றுக்கொள்ளல், செயற்புறக்கணிப்பு, ஊழியர் சேமலாப நிதி, அதிகாரமற்ற நிர்மாணங்கள், தொல்லைகள், அனுமதிப்பத்திரம் வழங்குதல், கட்டட அனுமதிப்பத்திரம் என்பன தொடர்பான முறைப்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டன. அட்டவணை 3 ஐ பார்க்கவும்.

**அட்டவணை 3 - விடய அடிப்படையில் அரசாங்க அலுவலர்களுக்கு எதிராக பெறப்பட்ட முறைப்பாடுகள்**

| | விடயம் | 2020 |
|---|---|---|
| 1 | காணி அனுமதிப்பத்திரம், அரச காணிகள் வழங்குதல் | 133 |
| 2 | ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் | 110 |
| 3 | தொழில் முடிவுறுத்தல், மீள அமர்த்தல், பதவி நீடிப்பு, திறமைகாண் | 82 |
| 4 | சேவையில் உள்ளீர்ப்பு, ஆட்சேர்ப்பு, நியமனம், பதவி உறுதிப்படுத்தல்,முற்றேதியிடல் | 81 |
| 5 | சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், நிலுவைகள் , படிகள் | 77 |
| 6 | தாமதிப்பு, தகுதியின்மை, அலட்சியம், தத்துவ துஷ்பிரயோகம் | 69 |
| 7 | பதவியுயர்வுகள், பதவி மூப்பு | 63 |
| 8 | பல்கலைக்கழகம், பாடசாலை அனுமதி பரீட்சை பெறுபேறுகள் | 52 |
| 9 | அதிகாரமளிக்கப்படாத கட்டட நிர்மாணங்கள் தொல்லைகள் | 47 |
| 10 | பல்வேறு வகையானவை | 25 |
| 11 | வீதிகள் | 24 |
| 12 | நட்டஈடு, வறுமை, நிவாரணம், சமுர்த்தி | 19 |
| 13 | இடமாற்றம் பெறல் | 15 |
| 14 | ஊ.சே.நி, ஊ.ந.நி, மானியம் | 15 |
| 15 | உரிமம், கட்டட அனுமதிப் பத்திரம் | 12 |
| 16 | வேலை தளத்தில் துன்புறுத்தல் | 12 |
| 17 | மின்சாரம் நீர் தொலைத்தொடர்பு துண்டித்தல் | 9 |
| 18 | கடன்கள் மீளளிப்புக்கள் மீள் அட்டவணைப்படுத்தல் | 6 |
| 19 | அதிகார எல்லைக்குட்படாத முறைப்பாடுகள் | 382 |
| | மொத்தம் | 1233 |

### 2.2.7 அமைச்சு அரசாங்க நிறுவனங்களின் பகுப்பாய்வு

உள்நாட்டலுவல்கள் அமைச்சு, மாவட்ட அலுவலகம்/ பிரதேச செயலகம் மற்றும் கல்வி,உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடுகளே மிகவும் அதிகமாக காணப்பட்டன. விசாரணையின் போது காணி அனுமதிப்பத்திரம் மற்றும் மானியங்கள் வழங்கல் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளே பெரும்பான்மையாக உள்ளன என தெரியவந்துள்ளது.

**அட்டவணை-4** அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களுக்கு எதிராக முறைப்பாடுகளின் எண்ணிக்கை

| | அமைச்சு திணைக்களம் அதிகாரசபை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உள்நாட்டலுவல்கள் மாவட்டசெயலகம், பிரதேச செயலகம் | 160 |
| 2 | கல்வி மற்றும் உயர்கல்வி | 147 |
| 3 | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை | 91 |
| 4 | ஓய்வூதியம் | 71 |
| 5 | கூட்டுத்தாபனங்கள்/அதிகாரசபைகள் (CPC,CEB,SLAA,RDA,SCBC,SLRC) | 57 |
| 6 | சுகாதார மற்றும் சுதேச மருத்துவம் | 39 |
| 7 | பல்வேறுவகையான நிறுவனங்கள் | 30 |
| 8 | நீர்பாசனம் மற்றும் மகாவலி அதிகாரசபை | 27 |
| 9 | போக்குவரத்து(SLCTB,CGR,CMV) | 25 |
| 10 | பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு | 23 |
| 11 | விவசாயம் | 21 |
| 12 | பொதுசேவை ஆணைக்குழு ( மத்திய மற்றும் மாகாண ) | 20 |
| 13 | அரசாங்க நிர்வாக அமைச்சு | 20 |
| 14 | கூட்டுறவு அபிவிருத்தி | 16 |
| 15 | சமூகசேவை / சமூத்தி, | 12 |
| 16 | பல்கலைக்கழகம் | 11 |
| 17 | தபால் மற்றும் தொலைதொடர்புகள் | 9 |
| 18 | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 9 |
| 19 | அரச வங்கிகள் | 8 |
| 20 | நிதி | 7 |
| 21 | வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அலுவலகம் | 7 |
| 22 | காடுகள் அபிவிருத்தி | 7 |
| 23 | தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகால் அமைப்புச் சபை | 5 |
| 24 | நகர அபிவிருத்தி அதிகாரசபை | 4 |
| 25 | தேசிய இளைஞர்கள் சேவைகள் சபை | 4 |
| 26 | நீதி | 3 |
| 27 | புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் | 3 |
| 28 | சுங்க திணைக்களம் | 3 |
| 29 | மோட்டார் வாகன திணைக்களம் | 2 |
| 30 | ஆட்பதிவு திணைக்களம் | 2 |
| 31 | பரீட்சை திணைக்களம் | 2 |
| 32 | பெருந்தோட்டங்கள் | 2 |
| 33 | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி | 2 |
| 34 | மத்திய கலாச்சார நிதி | 2 |
| | மொத்தம் | 851 |

### 2.2.8 கடந்த 10 வருடங்களாக ஒம்புட்சுமான் அலுவலகத்தினால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் பகுப்பாய்வு

2020 ஆம் ஆண்டு உள்ளடங்கலாக கடந்த 10 வருடங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகளை அவதானிக்கும் போது கடந்த ஆண்டான 2019 ஆம் ஆண்டிலேயே மிகவும் அதிகளவிலான எண்ணிக்கையில் முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் எண்ணிக்கையானது 1794 ஆகும். அடுத்ததாக அதிகளவில் 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளாகும். அதன் எண்ணிக்கை 1769. அதற்கு அடுத்ததாக 2018 ஆம் ஆண்டில் 1588 முறைப்பாடுகளாகும். மிகவும் குறைந்தளவிலான முறைப்பாடுகள் பெறப்பட்ட ஆண்டு 2014 ஆகும்.

படவரைபு 5 ஐ பார்க்கவும்

படவரைபு 5 கடந்த 10 வருடங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகள்

